14.12.2021
அசல் வழக்கு எண்: 105/2016

வா.சா.1 சாட்சி ராஜாராம் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

ஆரம்பித்த நேரம்– 1.15p.m.

1 முதல் 3 வாதிகள் சகோதரர்கள் என்று சொன்னால்சரிதான். 4 ம் வாதி 3 ம் வாதியின் மனைவி என்று சொன்னால் சரிதான். 1 ம் பிரதிவாதி பாண்டியம்மாள் எனது சகோதரி என்று சொன்னால் சரிதான்.அவர் மூத்த சகோதரி ஆவார். எத்தனை இலக்க சொத்திற்கு நான் வழக்கு தாக்கல் செய்துளளேன் என்று கேட்டால் நான் படிக்காதவன் அதனால் தெரியாது. என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு என் அய்யா பாகப்படி என்ன சொத்து கொடுத்தாரோ அந்த சொத்தை நான் கேட்கிறேன். வழக்கு தாக்கல் செய்ய வழக்கறிஞருக்கு யார் விபரம் சொன்னது என்று கேட்டால் நான் விபரம் சொன்னேன். பாண்டியம்மாள் தரப்பில் என்ன எதிர்வாதம் செய்துள்ளார் என்று கேட்டு தெரிந்து கொண்டேனா என்று கேட்டால் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. என்னுடைய பிராதில் சில சொத்துககள் பூர்வீக சொத்துக்கள் என்றும், சில சொத்துக்கள் கிரைய சொத்துக்கள் என்று சொல்லியுள்ளதில் எந்த சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்றும், எந்த சொத்துக்கள் கிரைய சொத்துக்கள் என்றும் பிரித்து சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். என்னுடைய தகப்பனார் பெயரில்கிரையம் வாங்கியது சம்மந்தமாக நீதிமன்றத்தில் பத்திரம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்று கேட்டால் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.11 ஆவணத்தின் படி கே.வெள்ளாகுளம் கிராமம் சர்வே எண்.168/19 ல் 78 செண்டில் தென்புறம் 39 செண்டு கிரையம் வாங்கியதாக பத்திரம் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி சொத்தை வழக்கில் வழக்கிடை சொத்தாக காண்பிக்கவில்லை என்று சொன்னால் எனக்கு அது பற்றி தெரியாது. என்னுடைய பிராதில் என் சகோதரியின் திருமணத்திற்கு நிறைய தங்க நகைகள், சீர் வரிசைகள் செய்ததாக நான் சொல்லியுள்ளதில் அது

தொடர்பான ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்று கேட்டால் இல்லை. S.P.நத்தம் கிராமத்தில் கண்ட சர்வே எண்.237/11 1 ஏக்கர் 6 செண்டு நிலத்தை 13.6.1977 செட்டில்மெண்டு பத்திரத்தின் மூலம் பாண்டியம்மாளுக்கு என் தகப்பனார் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். அந்த சொத்து என் தகப்பனாருக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல எல்லோரும் சேர்ந்து வாங்கினோம். 13.6.1977 செட்டில்மெண்டு மூலமாக கொடுத்த சொத்து எல்லோரும் சேர்ந்து வாங்கிய சொத்து என நான் தாக்கல் செய்துள்ள பிராதில் சொல்லியுள்ளேனா என்று கேட்டால் சொல்லவில்லை. நாங்கள் எல்லோரும் சேர்ந்து வாங்கிய சொத்து என்பதை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்று கேட்டால் இல்லை. 13.6.1977 ல் செட்டில்மெண்டு மூலமாக கொடுக்கப்பட்ட சொத்தானது எனது தகப்பனாருக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்றும் அவரது தனித்த விருப்பத்தின் பேரில் செட்டில்மெண்ட் மூலம் கொடுக்கப்பட்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல. எனது பிராதில் வாதிகளாகிய எங்களுக்கும், எனது தகப்பனார் மற்றும் என் தாயார் எங்களுக்குள் மனகசப்பு ஏற்பட்டதாக சொல்லியிருந்தால் அது தவறு ஆகும். என்னுடைய தகப்பனாரே குடும்ப சொத்துக்களை பிரித்து கொடுத்துவிட்டார் என்றும் சகோதரர்களாகிய நாங்கள் பிரித்து கொடுக்கவில்லை என்று சாட்சி தானாக சொல்கிறார். என்னுடைய தகப்பனார் எப்போது பாகம் பிரித்து கொடுத்தார் என்றால் 1989 ல் பிரித்து கொடுத்தார். அவ்வாறு பிரித்து கொடுத்ததற்கு எழுத்து மூலமாக ஆவணம் எதுவும் கொடுத்துள்ளாரா என்று கேட்டால் ஒவ்வொருவருக்கும் தான செட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளார். அந்த தான செட்டில்மெண்ட் பத்திர அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதா என்று கேட்டால் எனக்கு அது பற்றி தெரியாது. எனது தகப்பனார் யார் யாருக்கு என்ன என்ன சொத்து கொடுத்தார் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் இந்த இந்த சொத்துக்கள் இன்னாருக்கு பிரித்து கொடுத்ததாக சொல்லியுள்ளார் ஆனால் அதற்கான சர்வே எண், பட்டா எண், விஸ்தீரணம் ஆகியவை தெரியாது. இது

சம்மந்தமாக மேலே சொல்லியுள்ள செட்டில்மெண்ட் ஆவணங்களை எழுதி கொடுத்துள்ளார். என் தகப்பனார் எழுதி கொடுத்தாக சொல்லும் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்று கேட்டால் கொடுத்திருக்கிறேன். நான் சொல்வது போல் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல்செய்துள்ள ஆவணங்களை பார்வையிட்டால்தான் நான் சொல்லக்கூடிய விபரங்கள் உண்மையா என்று தெரிய வரும் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு எழுதப்பட்ட ஆவணங்கள் யார் முன்னிலையில் எழுதப்பட்டது என்று கேட்டால் என் தகப்பனாருக்கு தான் தெரியும். அந்த பத்திரத்தில் யார் யார் எல்லாம் கையெழுத்து செய்தார்கள் என்ற விபரமும் என் தகப்பனாரை கேட்டால்தான் தெரியும் என்று சொன்னால் சரிதான். நான் அந்த பத்திரத்தை படித்து பார்த்தேனா என்று கேட்டால் என்னை என் தகப்பனார் ஆடு மேய்க்க விட்டுவிட்டதால் நான் படிக்கவில்லை. அவ்வாறு என் தகப்பனார் எழுதி கொடுத்ததாக சொல்லும் ஆவணங்களின் அடிப்படையில் நாங்கள் பட்டா மாற்றியுள்ளோமா என்று கேட்டால் பட்டா மாற்றிகொண்டோம். எனக்கு எத்தனை இலக்க சொத்துக்கள் கொடுத்தார்கள், எத்தனை ஏக்கருக்கு பட்டா ஏற்பட்டு உள்ளது என்று கேட்டால் எனக்கு 5 ஏக்கர் கொடுத்தார்கள் அந்த 5 ஏக்கருக்கும் பட்டா மாற்றப்பட்டுள்ளது. அவ்வாறு சொல்லும் 5 ஏக்கருக்குதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்று கேட்டால் 3 சகோதரர்களுக்கும் கொடுத்த சொத்துக்களை இந்த வழக்கில் காண்பித்துள்ளேன். எந்த எந்த சொத்துக்கள் எனக்கு கொடுத்தார்கள், எந்த எந்த சொத்துக்கள் 2ம் வாதி, எந்த எந்த சொத்துக்கள் 3ம் வாதிக்கு கொடுத்தார்கள் என்று தனித்தனியாக பிரித்து காட்டவில்லை என்று சொன்னால் சரிதான். எல்லா சொத்துக்களும் வாதிகளுக்கு பாத்தியம் என்றுதான் கேட்டுள்ளேன். தாவா சொத்தில் வாதிகளுக்கு தனிப்பட்ட உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. அவரவர்கள் சொத்தை அவரவர் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லியுள்ளேன். என்னுடைய தம்பிகளான 2,3 வாதிகள் பெயருக்கு பட்டா மாறியுள்ளதா என்று கேட்டால் பட்டா மாறியுள்ளது. தாவா சொத்துக்கள் என் தகப்பனார் வாதிகளாகிய எங்களுக்கு எழுதி

கொடுத்ததாக சொல்லியுள்ளதும், அதன் அடிப்படையில் எங்களுக்கு தனித்தனியாக பட்டா ஏற்பட்டதாக சொல்வதும் தவறு என்று சொன்னால் சரியல்ல.

( பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1ன் குறுக்குவிசாரணை வேறு ஒரு நாளைக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).